**வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், சிங்கிபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**

**பிறப்பிப்பவர் – திரு. V. ரமா வெங்கடேசன்**

**செ.மு. ந.க.எண். 001 /2023–2024 நாள். .02.2024.**

**பொருள்:** மனைப்பிரிவு – வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம் – வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம் – வாழப்பாடி வட்டம்– சிங்கிபுரம் ஊராட்சி / கிராமம் –சர்வே எண். 100/1 D –இல் 2.21 ஏக்கர் அல்லது 8943.47 சமீ பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றது– மனைப்பிரிவிற்கான 3 % Market Value தொகை விவரம் வரப்பெற்றது – உரிய அரசுத் தலைப்பில் தொகை செலுத்தப்பட்டுள்ளது – ஒப்புதல் வழங்கி ஆணையிடல் – தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, 04.06.2004
2. அரசாணை (நிலை) எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ 4(3)) துறை நாள். 04.05.2017
3. நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களின் ந.க.எண்.SLM/3LMSP9RD/17357/2024/TCP நாள். 09.01.2024
4. திரு. பி. செந்தில்நாதன், திரு. எம். மோகன்ராஜ், மற்றும் திரு. ஏ. ரவி என்பவரின் மனு
5. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், வாழப்பாடி அவர்களின் ந.க.எண். 69/2024, நாள். 25.01.2024
6. சிங்கிபுரம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட தான ஆவண பத்திர எண். 76/2024, நாள். 05.01.2024
7. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்பட்ட தான பத்திரம் எண். 77/2024, நாள். 05.01.20247.
8. ஒன்றிய பொறியாளரின் தரச் சான்று, நாள். 29 .01.2024
9. சிங்கிபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் தீர்மான எண் 11(31) நாள். 2.2.24
10. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வாழப்பாடி அவர்களின் ந.க.எண். 216/2024/தி2, நாள். 29.01.2024

''''''''''

ஆணை

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், வாழப்பாடி வட்டம் சிங்கிபுரம் ஊராட்சி / கிராமம் –சர்வே எண். 100/1 D –இல் 2.21 ஏக்கர் அல்லது 8943.47 சமீ பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு வரன்முறை அனுமதி வழங்க கோரி பார்வை(4)இல் காணும் மனுதாரர் திரு. பி. செந்தில்நாதன், திரு. எம். மோகன்ராஜ், மற்றும் திரு. ஏ. ரவி என்பவரது விண்ணப்பம் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, பார்வை(3)–இல் காணும் நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களின் ந.க.எண்.SLM/3LMSP9RD/17357/2024/TCP நாள். 09.01.2024 அவர்களின் கடிதத்தில் APPROVAL NO. SWP/DTCP/SALEM/LAYOUT NO 15/2024 என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் மனைப்பிரிவுக்கு அரசாணையின்படி திட்டமில்லா

பகுதி அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண். 3 –இன் சுவராய்வுக் கட்டணம ரூ.1000/– ஐம். மற்றும் விதி எண். 9 இன்படி சந்தை மதிப்பில் 3% தொகையினை நிலப்பயன் மாற்ற கட்டணமாகவும். உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும்முன் வசூல் செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை(5)ல் காணும் சார் பதிவாளர், வாழப்பாடி என்பவர் கடிதத்தில் தற்போதைய அரசு இணையதள வழிகாட்டி மதிப்பின்படி, மேற்காணும் சர்வே எண். 100/1 D –இல் ஒரு ஏக்கருக்கு ரூ. 5,50,000/– என சந்தை மதிப்பு என தெரிவித்துள்ளார்.

மேலும், உத்தேச மனைப்பிரிவு சாலை பரப்பு 2732.29 ச.மீ, மற்றும் 48.76ச.மீ உள்ளாட்சிக்கும், 61.48 ச.மீ TANGEDCO –க்கும் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை(3) –ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை(6)–இல் காணும் விவரப்படி உள்ளாட்சிக்கும், பார்வை(7)–இல் காணும் விவரப்படி TANGEDCO –க்கும் தானம் செய்யப்பட்டுள்ளது.

பார்வை(8) –இன்படி, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வாழப்பாடி அவர்களின் கடிதத்தில் இம்மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட குடிநீர் வசதிகள், சாலை வசதிகள், தெருவிளக்கு, சாக்கடை வசதிகள் உரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன என ஒன்றிய பொறியாளர் சான்று வழங்கப்பட்டுள்ளது.

பார்வை(9) –இன்படி, இம்மனைப்பிரிவிற்கு சிங்கிபுரம் ஊராட்சி மன்ற தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், பார்வை(3) –இல் காணும் உத்திரவில் தெரிவித்துள்ளவாறு, சுவராய்வு கட்டணம் ரூ. 1000 வீதம் 37 மனைகளுக்கு ரூ 37000/– ம், Layout Account –இல் 03.02.2024 அன்றும், 3% சந்தை மதிப்பு ரூ. 36,465/– (ரூபாய் முப்பத்து ஆறாயிரத்து நானூற்று அறுபத்தைந்து மட்டும் ) உரிய அரசுத் தலைப்பில் 30.01.2024 அன்றும் செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பு | ஊராட்சி | சர்வே எண் | ஒரு ஏக்கர் சந்தை மதிப்பு | செலுத்த வேண்டிய தொகை (3%) சந்தை மதிப்பு(ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | வாழப்பாடி | சிங்கிபுரம் ஊராட்சி / சிங்கிபுரம் கிராமம் | ச. எண். 100/1 D | ரூ. 5,50,000/– | 1215500·3/100 = 36465 |
| | | | | 2.21ஏக்கர் · 5,50,000 = 1215500 | |

I. <u>நிலப்பயன் மாற்றக் கட்டணம் (அரசு தலைப்பில் கணக்கில் செலுத்த வேண்டியது )</u> செலுத்திய நாள். 30.01.2024

<u>வரன்முறைக் கட்டணம் செலுத்த வேண்டிய அரசு தலைப்பு</u>

0217 Urban Development 60 other Urban Development Schemes 800 other receipts AS Receipts Under land use conversion charges –27 Non Taxation fees –09 collections

(DPC : 0217 60 800 AS 22709)

II. கூராய்வுக் கட்டணம் , ஒரு மனைக்கு ரூ. 1000 வீதம் 37 மனைகளுக்கு ரூ. 37000/– செலுத்த வேண்டும். செலுத்திய நாள். 03.02.2024

எனவே, வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், வாழப்பாடி வட்டம் சிங்கிபுரம் ஊராட்சி /சிங்கிபுரம் கிராமம் ,சர்வே எண். 100/1 D –இல் 2.21 ஏக்கர் அல்லது 8943.47 சமீ பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி பார்வை(3)–இல் காணும் செயலாணையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைகளுக்கு வழங்கப்பட்ட வரன்முறை உத்தரவு எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்தாகிவிடும்.

2. மனைப்பிரிவில் அமையப்பெற்றுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.

3. மனுதாரரால் செலுத்தப்பட்ட தொகை குறைவு என பின்னர் அறியப்பட்டால் தொகை செலுத்த வேண்டும்.

4. மேற்காணும் மனைப்பிரிவில் வழக்குகள் ஏதும் நிலுவையில் இருப்பின் இந்த வரன்முறை ஆணை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

5. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய், தார்சாலை பணிகள், தெருவிளக்கு வசதிகள், உறிஞ்சுக்குழி பணிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முழுமையாக முடித்து 30 நாட்களுக்குள் அதற்கான புகைப்படத்தினை இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். பணிகள் 30 நாட்களுக்குள் முடிக்க தவறும்பட்சத்தில் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் ரத்து செய்ய நேரிடும்.

இணைப்பு – வரைபடம்.

V. Ravi

தலைவர்,
சிங்கிபுரம் ஊராட்சி,
வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம்,
சேலம் மாவட்டம்.

தலைவர்
ஊராட்சி மன்றம்
சிங்கிபுரம்

பெறுநர்

திரு. பி. செந்தில்நாதன், திரு. எம். மோகன்ராஜ், மற்றும் திரு. ஏ. ரவி, 5/262, காட்டூர், அமானி கொண்டலாம்பட்டி, நாட்டாமங்கலம், சேலம் 636 010

படி – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தளவாய்ப்பட்டி அஞ்சல், சேலம் இரும்பாலை மெயின் ரோடு, சேலம் 636 302 தொலைபேசி 0427 – 2448625 அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது

படி – வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வாழப்பாடி

படி .– சார் பதிவாளர், வாழப்பாடி

படி – வட்டாட்சியர், வாழப்பாடி